# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 215/2018

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ராஜராஜ சோழன் தேதி : 17.10.2024

**குறுக்குவிசாரணை**:– (5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில்)

என்னுடைய பிறந்த தேதி 13.07.1994. தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 4 ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன். நான் தனியாக எண்.69, திருச்சி மெயின்ரோடு, தாதகாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அது தாவா சொத்து என்றால் ஆமாம். என் தகப்பனார் அருகில் வசித்து வருகிறார். அதன் கதவு எண் எனக்கு தெரியாது. அவர் உடல் ஊனமுற்றவர். அவரை ஆள் வைத்து நான் பராமரித்து வருகிறேன்.

தாவா சொத்து 1870 சதுர அடி. 16.09.1987 ம் தேதியன்று பாகப்பத்திரப்படி "C" Schedule சொத்தாக தாவா சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியம் என்றால் ஆமாம். அதில் முன்புறம் 3 கடைகள் உள்ளது. அதில் வடக்கில் ஒரு கடை காலியாக உள்ளது என்றால் ஆமாம். அதில் தெற்குபுறம் 2 கடைகள் உள்ளது. ஒன்று அடகு கடை, மற்றொன்று காஃபி பார் உள்ளது. 14.01.2008 ல் அந்த சொத்தைப் பொறுத்து ஒரு புவனேஸ்வரி என்பவருக்கு என்னுடைய தகப்பனார் ஒரு பவர் பத்திரம் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த புவனேஸ்வரியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு ரசீது தகப்பனார், தாயார், என்னுடைய சகோதரர் அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியின் கையெழுத்து அந்த ரசீது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

14.09.2008 ல் புவனேஸ்வரியுடன் ஒரு ரத்தினம் கிரய ஒப்பந்தம் செய்துகொண்டார் என்றால் எனக்கு தெரியாது. 26.05.2008 ல் புவனேஸ்வரி 3 வது பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வருவாய் துறை ஆவணங்கள் 3 வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். 3 ம் பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் செலுத்தி வருகிறேன். என் தகப்பனார் 3 ம் பிரதிவாதியிடம் ஒரு வருடத்தில் காலி செய்து தருவதாகவும், மாதம் ரூ.1250/– வாடகை தருவதாகவும்,



ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல. வாடகைதாரர்களிடம் 3 ம் பிரதிவாதி

வாடகையை வாங்கிக்கொள்ளுமாறு என் தகப்பனார் கூறினார் என்று சொன்னால் சரியல்ல. வாடகைதாரர்களிடம் 3 ம் பிரதிவாதிக்கு வாடகை பின்னிட்டு தரவேண்டாம் என்று என் தகப்பனார் கூறிவிட்டார் என்றும், என்தகப்பனாரும் ஒப்புக்கொண்டபடி ரூ.1250/– வாடகையை தரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என் தகப்பனார் மற்றும் என் சகோதரர் சேர்ந்து அ.வ.எண். 189/2008 சேலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். 07.08.2012 ல் அந்த வழக்கு நடத்தாமல் தள்ளுபடி ஆனது என்றால் ஆமாம். அதன் பிறகு 3 ம் பிரதிவாதி வீட்டை காலி செய்து தருமாறு பலமுறை கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரும் ஒப்புக்கொண்ட வாடகையை கொடுக்காமல் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2021 ம் வருடம் 3 ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் ஆமாம்.

நான் 26.06.2018 ல் ஒரு அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பதிலுக்கு ஒரு பதில் அறிவிப்பு 31.07.2018 ல் நான் கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த பதில் அறிவிப்பு **பி.வா.சா.ஆ.–1** ஆகும். புவனேஸ்வரிக்கு என் தகப்பனார் எழுதிக்கொடுத்த பவர் பத்திரம், அந்த பவரின் அடிப்படையில் அய்யந்துரைக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் ஆகியவற்றை ரத்து செய்ய சொல்லி வழக்கு எதுவும் தனியாக தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் அத்தகைய பரிகாரம் கேட்டுள்ளோம்.

தாவா சொத்திற்காக வரி ரசீதுகள் அய்யந்துரை பெயரில் உள்ளது என்றால் ஆமாம். நாங்கள் தான் வரி கட்டி வருகிறோம். அந்த வரி ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் பனியன் கம்பெனி வைத்திருந்தார். என் தகப்பனார் மது அருந்திவிட்ட குடும்பத்தை கவனிக்காமல் இருந்துவந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா பொய்யானது என்றும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.